END TIME WARRIORS

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS

Battle 01 - Field 04 - August 2020

# வெளிச்சம்



**உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு**

**லூக்கா.*11:35***

## முதல் வரிகள்......

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு வாலிப தம்பி / தங்கச்சி, இந்த கடிதம் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு நாளும் அவருடைய பலத்த கிருபை உங்களை வலுவாதபடி காத்துக் கொண்டு வருகிறதற்காக அவரை துதிக்கிறேன். நாம் வாழும் இந்த கடைசி நாட்களில், அநேக சவால்களை நம்முடைய வாழ்க்கையில் எதிர் கொள்ளுகிறோம். எபே.*6:12* சொல்லுகிறபடி, 'இந்த உலகத்தில் நமக்கு போராட்டம் உண்டு.' ஆனால், அவைகளை எதிர்க்க திராணியுள்ளவர்களாக நீங்கள் மாற வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. பிசாசின் சேனைகளையும், அவனுடைய திட்டங்களையும் கண்ட இடங்களிலெல்லாம் தகர்த்தொளிக்கிற ஒரு சேனை எழும்ப வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். சங்.*144:1* ல் எழுதியிருக்கிறபடி, "என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்". இதை வாசித்து கொண்டிருக்கிற வாலிபனே, உன்னை குறித்து தான் இந்த வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. உன்னையே கர்த்தர் உருவாக்க விரும்புகிறார். அநேக நேரங்களில், நீ கடந்து செல்லுகிற பாதை ஏதோ புதுமை என்று எண்ணி கொண்டிருக்கிறாய், ஆனால், கர்த்தர் உன்னை யுத்தத்திற்கு பழக்குவிக்கிறார். அவருடைய கரத்தில் நீ உண்மையாய் உன்னை அர்ப்பணித்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது, இந்த உலகம் கண்டிராத எழுப்புதலில் நீ பங்கடைவது உறுதி.

எனவே, அனுதினமும் அவருடைய பாதத்தில் காத்திருக்க பழகு. அவருடைய வேதத்தில் அனுதினமும் பிரியமாயிரு. அவருடைய சத்தத்தை கேட்டு, அவருடைய சித்தத்தை செய்ய விரும்புகிற உன்னோடு கூட, அவர் பேச விரும்புகிறார். ஜெபத்தோடு வாசியுங்கள், கர்த்தர் தாமே உங்கள் மனக்கண்களை திறந்தருளுவாராக.

யுத்த களத்தில் உங்களோடு,
*R.*சாலமோன்

# வெளிச்சம்

*John Haggy says, "We are indeed the light of the world, but only if our switch is turned on"*. ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும், இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறார்கள் என்கிறது வேதம், ஆனால் ஒரு தனி மனிதனுக்குள் ஏற்பட வேண்டிய எழுப்புதல் ஏற்படாத வரை அவன் இந்த உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்க முடியாது. லூக்கா.*11:35* ல் எழுதியிருக்கிறபடி, "ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு". நீதி.*6:23* சொல்லுகிறது, "...வேதமே வெளிச்சம்". இந்த வேத வார்த்தைகள் உனக்குள் இல்லாதபடி நீ பிசாசை ஜெயிக்க முடியாது. இந்த வேத வார்த்தைகள் தான் ஆவியின் பட்டயமாக செயல்படுகிறது. இதை அறியாதபடி, ஒரு வாலிபன் தனக்கெதிராய் வருகிற சவால்களை எதிர்கொள்ள முடியாது. இந்த உலகத்தினால் உன்னை கரைப்படுத்தினாலொழிய உன்னிலிருந்து வெளிப்படும் வெளிச்சத்தை தடை செய்ய முடியாது என்பதை நன்கு அறிந்த பிசாசு, அனுதினமும் பல இச்சையான காரியங்களை உன் இருதயத்தில் போடுகிறான், பல அசுத்தமான சிந்தனைகளை கொடுத்து தேவனுடைய திட்டத்தை விட்டு வழிவிலக செய்கிறான். இந்த வெளிச்சம் பிரகாசிக்கும் போது, அது அநேக வாலிபர்களை தேவனுடைய இராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டு வரும். எனவே தான், இந்த வேதம் எச்சரிக்கிறது, "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" என்று. எனவே, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவருக்கு பிரியமான மற்றும் சித்தமான ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். நீ ஒரு சேனைவீரன் என்பதை ஒரு நாளும் மறந்து போக கூடாது. கர்த்தரை விட்டும், அவருடைய திட்டத்தை விட்டும் பிரிக்கிற பிசாசின் சகல தந்திரங்களையும் அறிந்தவனாக] நீ செயல்பட வேண்டும். உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இந்த எழுப்புதலில் கர்த்தர் உன்னை ஒரு பெரிய திட்டத்திற்கு தெரிந்து கொண்டிருக்கிறார். அவருடைய கையில் பயன்படுத்த படுவதற்கு, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகதபடிக்கு நீ அனுதினமும் கவனமாயிருக்க வேண்டியது அவசியம். பரிசுத்த ஆவியானவர் உன்னை முழுவதுமாக ஆளுகை செய்வதற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அவர் உன்னை இயக்குவதற்கு இடங்கொடுக்க வேண்டும். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்போது இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்கிற ஒரு வாழ்க்கைக்கு உள்ளாக நீ கடந்து வர முடியும்.

இந்த நாட்களிலும், எப்போதும் இல்லாத அளவு அநேக வாலிபர்கள் கர்த்தருடைய வார்த்தையை கேட்கவும், அதற்கு கீழ்ப்படியவும், அதன்படி செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள். வாலிபர்களுக்குள் கர்த்தர் தமது கடைசி கால எழுப்புதல் அக்கினியை போட ஆரம்பித்துவிட்டார். தனக்குள் கர்த்தர் கொடுத்த வெளிச்சத்தை இருளாகாதபடி காத்துக் கொண்டவர்கள், இந்த எழுப்புதல்வாசனையை நுகர ஆரம்பித்துவிட்டார்கள்.

இதை வாசிக்கிற வாலிப தம்பி/தங்கச்சி இந்திய தேசத்தின் எழுப்புதலில் உன்னுடைய பங்கையும் கர்த்தர் எழுத விரும்புகிறார். நீ வாழ்கிற இந்த காலம் கடைசி காலம் என்பதை மறந்து போகாதே. இந்த பூமியானது தன்னுடைய ஓட்டத்தின் முடிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. மேலும், இந்த காலங்கள் நமக்கு சொல்லுகிற செய்தி ஒன்று தான், வேதம் முன்னறிவித்த சேனை எழும்ப ஆயத்தமாகிவிட்டது. இந்த சேனையில் இருந்து விடுபடுவதற்கு அல்ல, மாறாக இணைக்கப்படுவதற்கும் அவருடைய சித்தத்தை செய்து முடித்தவர்களாய் அவரை சந்திப்பதற்க்கும் நீ ஆயத்தப்படு, உன்னோடு கூடின கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து.

அன்பின் பிதாவே, எங்களுக்குள் இருக்கும் வெளிச்சத்தை குறித்து கவனமுள்ளவர்களாகவும், அது இருளாகாதபடிக்கு எங்களை காத்துக் கொள்ளும். உம்முடைய எழுப்புதல் திட்டத்தில் உம்மால் பயன்படுத்த படுவதற்கு எங்களை ஒப்புக் கொடுக்கிறோம். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்

- *R.சாலமோன்*

## முதலாம் வார ஜெபக்குறிப்புகள்

- நம் தேசத்தில் உள்ள இரட்சிக்கப்படாத வாலிபர்கள் அநேகர் இரட்சிக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.
- சமீப நாட்களாக பெரு நகரங்களை தாண்டி சிறு, குறு நகரங்களில் கொள்ளை நோயின் தாக்கம் அதிகமாகி வருகிறது. இதன் தாக்கம் குறையும்படியாய் ஜெபிப்போம்.
- இரட்சிக்கப்பட்டிருக்கிற வாலிபர்கள் எல்லாருக்குள்ளும் கர்த்தர் இந்த நாட்களில் ஜெப ஆவியை ஊற்றும்படியாய் ஜெபிப்போம். அநேக வாலிபர்கள் குழுக்களாய் கூடி ஜெபிக்கிற வாஞ்சையை கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும்படியாய் ஜெபிப்போம்.
- அநேக வாலிபர்கள் இந்த நாட்களில் தங்கள் எதிர்காலங்களைக் குறித்து கலங்கி மனஅழுத்தத்திற்குள்ளாகிறார்கள். அவர்கள் தங்கள் நம்பிக்கையும் பெலனும் கிறிஸ்து என்று அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

## இரண்டாம் வார ஜெபக்குறிப்புகள்

- அநேக இளவயது மரணங்கள் பல்வேறு காரணங்களினால் நடக்கிறதை அனுதினமும் பார்க்கிறோம். இந்த மரணங்கள் நிறுத்தப்படவும், வாலிபர்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
- குற்றமில்லாத இரத்தம் இந்த நிலத்திலே சிந்தப்படுகிறதின் நிமித்தம் தேவ கோபத்திற்கு நம் தேசம் ஆளாகாதபடிக்கு தேசத்தின் இத்தகைய பாவத்தை அறிக்கை செய்து ஜெபிப்போம்.
- சபைகளை கர்த்தர் சுத்திகரித்து எழுப்புதலுக்கு ஆயத்தப்படுத்தும்படி ஜெபிப்போம்.
- தேசத்தலைவர்களில் அநேகர் கொள்ளை நோயினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதினால் அரசு எந்திரம் சீராக இயங்க முடியாத சூழல் உருவாகி உள்ளது. ஆகவே அவர்கள் பாதுகாக்கப்பட தொடர்ந்து பணி செய்யும்படி ஜெபிப்போம்.

## மூன்றாம் வார ஜெபக்குறிப்புகள்

- சிறு, குறுந் தொழில் செய்து வந்தோர் பொருளாதார ரீதியாக கடுமையான நெருக்கடிகுள்ளானதால் மீண்டும் தங்கள் தொழிலை துவங்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சீக்கிரமாய் மீண்டு எழும்பும்படி ஜெபிப்போம்.
- ஏற்றுமதி, இறக்குமதி முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதால் தொழிற்சாலைகள் மூலப்பொருள் இன்றியும், தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்த முடியாமலும் முடங்கிப் போய் உள்ளன இந்த சூழ்நிலைகள் மாறி இயல்பு நிலை திரும்ப ஜெபிப்போம்.
- போதகர்கள், சபை மேய்ப்பர்கள் எல்லாருக்குள்ளும் எழுப்புதலைக் குறித்த தாகமும், பாரமும் அதிகமாகவும், தங்கள் மந்தையை அதற்கு நேராய் நடத்தவும் ஜெபிப்போம்.
- அநேக பன்னாட்டு நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் அநேகர் வேலை இழந்துள்ளனர். அவர்களெல்லாரும் விரைவில் பணியமர்த்தப்பட ஜெபிப்போம்.

## நான்காம் வார ஜெபக்குறிப்புகள்

- அயல்நாடுகளில் கல்வி கற்றுவந்த அநேகருடைய எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. இந்த சூழ்நிலைகள் விரைவில் மாறி இயல்பு நிலை திரும்ப ஜெபிப்போம்.
- தேசம் எங்கிலும் ஒரு மாபெரும் ஜெப ஆவி ஊற்றப்படும்படி ஜெபிப்போம்.
- தங்களுக்கு பிரியமானவர்களை இந்த கொள்ளை நோயினால் மரிக்கக் கொடுத்து துக்கத்தோடு இருக்கிற ஜனங்களுக்கு கர்த்தரே ஆறுதலாய் இருக்கும்படியாய் ஜெபிப்போம்.
- இந்த நாட்களில் அநேக வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை முழுமையாய் கர்த்தருக்கென்று அர்ப்பணித்து தேவ பணி செய்திட ஜெபிப்போம்.

## ஐந்தாம் வார ஜெபக்குறிப்புகள்

- வெளிநாடுகளில் பணியாற்றி வந்த அநேகர் இந்த கொள்ளை நோயினால் தங்கள் பணிகளை விட்டு வந்ததினால், வாழ்வாதாரத்திற்கு வழி இன்றி தவிக்கின்றனர் அவர்கள் சூழ்நிலைகளில் கர்த்தர்

மாற்றத்தை அருளும்படியாய் ஜெபிப்போம்.

- இந்த கடைசி நாட்களில் வாலிபர்கள் யாவரும் வேத வார்த்தையின்படி தரிசனத்தை அடையும்படி ஜெபிப்போம்.
- இந்த கடினமான சூழ்நிலையை கையாளத் தேவையான தேவ ஞானம் நம்மை ஆளுகின்ற தலைவர்களுக்கு கர்த்தர் அருளும்படியாய் ஜெபிப்போம்.
- தேசம் சுவிசேஷ எழுப்புதல் அடைந்து, கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்

# TRUE SOLDIER

யுத்த களத்தில் நிற்க ஆயத்தபட்டுக் கொண்டிருக்கும் யுத்த சேனைகளாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் சேனைகளின் தேவனாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 'மாவீரன் அலெக்சாண்டர்' பற்றி நாம் அனைவரும் அறிவோம். கிமு *(336-323)* வரை மக்கெடோனின் பேரசராக ஆட்சி புரிந்தார். உலக வரலாற்றில் இதுவரை எந்த போரிலும் தோல்வியை சந்தித்திராதவர். உலகின் பெரும் பகுதியை கைப்பற்றி ஆண்டார். இந்த மகா அலெக்சாண்டரால் சொல்லப்பட்ட ஒரு ஆங்கில கூற்று, "*I am not afraid of an army of lions led by sheep; I am afraid of an army of sheep led by a lion*". இந்த கூற்றில் செம்மறியாட்டால் நடத்தப்படும் சிங்கக் கூட்டங்களுக்கும், சிங்கங்களால் நடத்தப்படும் செம்மறியாட்டு கூட்டங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை இந்த கூற்று நமக்கு தெளிவு படுத்துகிறது. நீ யாரால் நடத்தப்படுகிறாயோ, அதைப் பொறுத்தே உன் பலன் தீர்மானிக்கப்படுகிறது. யூத ராஜ சிங்கமான இயேசு கிறிஸ்துவால் நடத்தப்படும் யுத்த சேனைகளான நமக்கு வேண்டிய ஆயத்தம் யோவான் *1:4*, "ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது". "*A true Soldier should know His master and His voice*'. ஒரு உண்மை போர் வீரன் தன்னை நடத்தும் சேனைத் தலைவருடைய சத்தத்தை அறிந்தவனாகவும், அதற்க்கு செவி கொடுக்கிறவனாகவும் இருப்பான். ஒவ்வொரு போர் வீரனுக்கும் யுத்த காலத்தில் நிற்கும் போது, தனக்கு முன் நிற்கும் எதிரியையும், அவனுடைய இலக்கையும் தகர்ப்பதற்கு வேண்டிய முழு வரைபடங்களும், கட்டளைகளும் மேலிடத்தில் இருந்து அவனுக்கு அனுப்பப்படுகிறது. அதைத் திறம்பட செய்து முடிக்க தனக்கு மேல் இருக்கும் அதிகாரியின் சொற்படி செய்கிறவனாக இருக்க வேண்டும். யுத்த களத்தில் நிற்கும் போர் வீரன் தனக்கு பிரியமானதை, தன் பார்வைக்கு நலமானதை செய்ய முடியாது. தன் மேல் இருக்கும் அதிகாரியின் கட்டளைக்கே கீழ்ப்படிய முடியும். அவ்வாறு நீங்களும் நானும் சேனை அதிபதியாம் இயேசு கிறிஸ்துவால், நடத்தப்படும் போதும், அவருடைய சத்தத்தை கேட்கும் போது தான், யுத்தத்தில் நிற்க முடியும். யோவான்*1:4* ல் சொல்லப்பட்டபடி, ஆடுகள் அவருடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவருக்கு பின் செல்லுகிறது. ஆடுகளாகிய நீங்களும் நானும் நல் மேய்ப்பனை அறிந்திருந்தால் அவருக்கு கீழ்படிந்து பின் செல்லுவோம். ஆனால், அநேக நேரங்களில் அவருடைய சத்தத்தை கேட்க முடியாதபடிக்கு பிசாசானவன் வஞ்சிக்க வருகிறான். யோவான்*1:12* ல் சொல்லப்பட்டபடி "... ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்". நம் எதிராளியானவன் ஆட்டை போல நமக்குள் புகுந்து, கர்த்தருடைய சத்தத்தை நாம் கேட்க முடியாத படி நம்மை சிதறடிக்கிறான். எனவே, ஒரு சேனை வீரன் உலகம் தன்னை கறைபடுத்தாதபடிக்கு காத்துக் கொள்ள வேண்டும். கறைபடாத ஒரு வாழ்க்கையை உடையவர்களே யுத்தத்தில் நிற்க முடியும். பிசாசின் தந்திரங்களை அறிந்து, அவனை அழிக்கிற சிங்கத்தினால் நடத்தப்படுகிற ஆட்டுக்கூட்டங்கள் நாம். ஆதியிலே ஆதாமும், ஏவாளும் கர்த்தருடைய சத்தத்தை அறிந்தும், சர்ப்பமாகிய

பிசாசுக்கு செவி கொடுத்து, தோற்றார்கள். நாம் தோற்பதற்க்கு அல்ல, யுத்தத்தில் ஜெயிப்பதற்கு தெரிந்து கொண்ட யுத்த சேனைகளாய் இருக்கிறோம். ஆதாம் தோற்ற இடத்தில், ஜெயித்து காட்டிய இயேசு கிறிஸ்துவோடு கூட நடக்கிறோம். இன்றைக்கு நீயும் நானும் அவருடைய சத்தத்தை கேட்டு, அவருக்கு செவி கொடுக்கிற உண்மை போர் வீரனாய் பொல்லாங்கனை ஜெயிப்போம்.

*- Daisy Solomon*

# ரோமர் 4: விசுவாசம் Vs நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்

நாம் எதைக்கொண்டு நீதிமான்களாக்கப்பட்டோம் - விசுவாசத்தினாலா அல்லது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலா? மோசே கொடுத்த நியாயப்பிரமாணத்தைப் பற்றியும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வந்த கிருபையைப் பற்றியும் நமக்கு ஒரு பொதுவான புரிதல் தேவை. இயேசு கொடுத்த புதிய உடன்படிக்கை மோசே கொடுத்த பழைய உடன்படிக்கையை விட மிக உயர்ந்தது, எபிரேயர் 8 (7 மற்றும் 13 வது வசனங்கள்) மற்றும் அப்போஸ்தலர் 13:39- "மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது."

இயேசு கிறிஸ்து கொடுத்த புதிய கற்பனையாகிய உடன்படிக்கையானது நம்மை மகா பரிசுத்த நிலைக்கு அழைத்துச் செல்கிறது. உதாரணமாக, 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்ற பழைய உடன்படிக்கையானது மாம்சத்தோடு தொடர்புடையதாக இருந்தது. ஆனால், 'ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று' என்று இயேசு கிறிஸ்து கூறிய புதிய உடன்படிக்கையானது அதை மாம்ச நிலையிலிருந்து மாம்சத்தைத் தூண்டுகிற சிந்தனை நிலைக்கு எடுத்துச் சென்றது

இதைச் சொன்னபின், நீங்கள் பாவத்தை வென்று, உங்கள் சொந்த பலத்தினால் அல்லது உங்கள் சொந்த நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஆண்டவரைப் பிரியப்படுத்தும் ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை வாழ முடியும் என்று நீங்கள் உண்மையில் நினைக்கிறீர்களா? ரோமர் 10: 3 ல் வேதம் கூறுகிறது "எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்." ஆகவே, நம்முடைய சுயநீதி மனப்பான்மை நம்மை முட்டாளாக்க வேண்டாம்!

கலாத்தியர் 2:21 "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே."

நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலாத்தியர் 5:4). நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவதன் மூலம் நாம் நீதிமான்களாக மாற மாட்டோம், ஆனால் அவரை நம்புகிற அனைவருக்கும் ஆண்டவரின் கிருபையால் நீதிமான்களாகிறோம். இப்போது இந்த கேள்வி உங்கள் மனதில் எழலாம். அப்படியானால், இயேசு மோசேயின் சட்டத்திற்கு எதிரானவரா? அதற்கான பெரிய பதில் "இல்லை" என்பதே. உலக செல்வங்களை விட அதிக ஆவிக்குரிய வரங்களுடன் இயேசு சட்டங்களை அடுத்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளார். ரோமர் 10: 4-ல் நியாயப்பிரமாணத்தின் முடிவு இயேசு என்பது அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்."

கடைசியாக, நம்முடைய கேள்விக்கான பதிலை கலாத்தியர் *2: 15-16*-ல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதை இங்கே கவனிக்கிறோம். "*15.*புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்.*16.* நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே."

**ஜெபம்**

இந்த ஜெபத்தில் என்னுடன் இணைந்து கொள்ளுங்கள்: பரிசுத்தமுள்ள எங்கள் பரலோகத் தகப்பனே, எங்களுடைய சுயநீதியும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளும் எங்களை காப்பாற் முடியாது என்பதை அறிந்து கொண்டோம். உமது கிருபையினாலும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலும் மட்டுமே காப்பாற்றப்படுகிறோம். எங்கள் வாழ்க்கையில் உங்கள் விருப்பத்தையும் திட்டங்களையும் புரிந்து கொள்ள எங்களுக்கு உதவி புரியும். இயேசுவின் நாமத்தில் நாங்கள் ஜெபிக்கிறோம், பிதாவே! ஆமென்.

*-Manoj Kumar*



# கோதுமை மணிகள்

## ஜிம் எலியட்

கடைசி கால யுத்த சேனைகளாகிய உங்களை, இந்த பகுதியில் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து ஒரு சில மாதங்களாக ஒவ்வொரு இரத்த சாட்சிகளைக் குறித்து நாம் பார்த்து வருகிறோம். இன்றும் கூட கர்த்தருக்காய் மரித்த வாலிபனைக் குறித்ததான சில காரியங்களை உங்கள் முன்பாக எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற அந்த மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து இருளில் வாழ்ந்துக் கொண்டிருந்த அவுக்கா (*Aucas*) பழங்குடியினருக்கு அறிவிக்க சென்றவர் தான் ஜிம் எலியட் என்ற வாலிபன். இவரைக் குறித்து நம்மில் அநேகர் கேள்விப்பட்டிருக்கிறோம்.

தென் அமெரிக்காவில் ஈக்வடார் பகுதியில் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அங்கு மிகவும் கொடூரமான காட்டுவாசி ஜனங்கள் வசித்து வந்தனர். எந்த வெளிநாட்டவர்கள் அவுக்கா ஜனங்கள் மத்தியில் வந்தாலும் அவர்கள் திரும்பி சென்றதாக சரித்திரம் இல்லை. இந்த ஜனங்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க வேண்டும் என்ற ஆசை ஜிம் எலியட்டை அதிகமாய் ஊந்தியது. *29* வயதான ஜிம் எலியட்டும் தனது நான்கு நண்பர்களும் சேர்ந்து, வெகு நாள் ஜெபத்திலும், பிரயாசத்திலும், கர்த்தரின் சித்தப்படி அந்த காட்டிற்கு செல்ல திட்டமிட்டனர். *1952*ம் வருடம் பிப்ரவரி 2ம் தேதி தன் பெற்றோர்களை விட்டு அந்த *5* வாலிபர்களும் அவர்களின் மனைவிகளும் *18* நாள் கடல் பிரயாணத்தில் தென் அமெரிக்காவை வந்து சேர்ந்தனர். முதலில் அவர்கள் சிறிய இந்திய கிராமமான குயிச்சுவா என்ற இடத்தில் தங்கி, இயேசுவைக் குறித்து சொல்லியும், அவர்களின் மொழியான ஸ்பானிஷ்( *Spanish* ) மொழியும், அவுக்கா ஜனங்கள் மொழியையும் கற்றுக் கொண்டனர். ஏறக்குறைய *3* ஆண்டுகளுக்கு பின்பதாக குயிச்சுவா பகுதி ஜனங்கள் உண்மையான விசுவாசிகளாய் மாறினர்.

இது தான் அவுக்கா ஜனங்கள் மத்தியில் செல்வதற்கான சரியான நேரம் என்று உணர்ந்த ஜிம் எலியட் மற்றும் அவருடைய நண்பர்கள் ஒரு சிறிய விமானத்தில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். அந்த விமானத்தில் அநேக பரிசுப் பொருட்களையும், ஒலிப்பெருக்கி ஒன்றில் அவுக்கா ஜனங்கள் பேசும் மொழியில் அநேக அன்புச் சொற்களைக் கூறியும், அவர்கள் இருந்த காட்டுப்பகுதியில் மேலே பறந்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு பரிசுப் பொருட்களை மேலேயிருந்து வீசினர். ஆவலாய் வந்து அந்த பொருட்களை எடுத்து சென்ற ஜனங்களின் அருகில் தரையிறங்குவதற்கான கடற்கரை ஒன்றைக் கண்டனர். அங்கு இறங்கினதும் ஒரு ஆணும் இரண்டு பெண்களும் வந்தனர். அவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்து அடுத்த முறை அநேகரை அழைத்து வருமாறு கூறினர். அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டானது. அடுத்த முறை அதேபோல் இருவர் வந்தனர். ஆனால், கூடவே அவர்கள் பின்பதாக கூட்டமாக அவுக்கா ஜனங்கள், விஷம் வாய்ந்த ஈட்டியுடன் வந்து 5 வாலிபர்களையும் தாக்கினர். அவர்கள் வந்த விமானத்தையும் மோசமாக தாக்கினர். அதே இடத்தில் ஜிம் எலியட்டும் அவர்கள் 4 நண்பர்களும் மரித்தனர். அவர்களின் மனைவிகள் ஆர்வத்துடன், சென்றவர்களின் பதிலுக்காக காத்திருந்தனர். ஆனால், பதில் ஒன்றுமே இல்லை. பின்பு, அமெரிக்காவின் தேடல் குழுவினர் உதவியோடு அவர்கள் சடலங்களை கண்டு பிடித்து அவர்களை அடக்கம் செய்தனர்.

இவர்களின் பிரயாசங்கள் வீணாகவில்லை. 2 ஆண்டுகளில் ஜிம் எலியட்டின் மனைவி தன் கணவனை கொலைச் செய்த ஜனங்களுக்கு சுவிசேஷம் சொல்ல புறப்பட்டார். எந்த ஜனங்கள் ஜிம்மையும் அவர்கள் நண்பர்களையும் கொன்றார்களோ அவர்கள் முன்பாக நின்று, இயேசுவின் அன்பை அவருடைய மனைவி கூறுகையில் அந்த தலைவன் மனமுடைந்து கண்ணீரோடு இயேசுவை ஏற்றுக்கொண்டான். இன்று அந்த பகுதி முழுவதும் கர்த்தருக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு வேளை இந்த சூழ்நிலையில் நாம் இருந்திருந்தால் அந்த தலைவன் மேல் உள்ள கோபத்தால் ஏதாவது ஒரு கடினமான வார்த்தைகளையாவது நாம் கேட்டிருக்கக்கூடும். ஆனால், ஜிம்மின் மனைவி இயேசுவின் அன்பையே காட்டினார். இருளிலே இருக்கும் ஜனங்களுக்கு எப்படியாகிலும் வெளிச்சத்தைக் காட்ட வேண்டும் என்ற ஆத்தும பாரம் அவரை இருக்க விடவில்லை.

இன்று கடைசி காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சேனைகளாகிய நாம் கர்த்தருக்காக என்ன செய்ய போகிறோம் ?

நம்முடைய பழைய வாழ்க்கை இருளாகவும், மோசமாகவும் இருந்த போதிலும் கூட நம்மை வெளிச்சத்தில் கொண்டு வந்து இன்று ஒரு சேனை வீரர்களாய் கர்த்தர் மாற்றியிருக்கிறார். இன்றும் அந்த அவுக்கா ஜனங்களைப் போல அநேகர் நம் தேசத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்காக நாம் எழும்புவோமா?
கர்த்தர் அப்படிப்பட்ட சேனையாக நாமும் மாற வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்.

எழும்பி பிரகாசிப்போம் கர்த்தருக்காக !

தன்னால் இழக்க முடியாத ஒன்றைப் பெற்றுக் கொள்ள, தன்னால் வைத்திருக்க முடியாத ஒன்றை இழப்பவன் முட்டாளல்ல

*-Priya*

# *WATER TURNS TO LIGHT*

**அன்பு தம்பி தங்கச்சி! *School days* லாம் நமக்கு *Golden days* மாதிரி ல.. கவலை இல்லாத பருவம், ஆனா முக்கியமான பருவம்.. ஒரு நாள் *7th B1 class*க்கு *Science mam* வேகமா வந்தாங்க, " *Dear Students:* நாளைக்கு எல்லாரும் '*Water Turns To Light*' அப்டிங்குற *activity* பண்ணப் போறீங்க நல்ல *transparent* ஆன பொருளில் தண்ணி ஊற்றி அதை *sun light* ல காட்டனும். யாருடைய பொருள் *golden light* அ வெளிப்படுத்துதோ அவங்களுக்கு மட்டும் தான் *full marks (10/10)* என்று சொன்னாங்க.. எல்லாரும் ரெம்ப ஆர்வமாய் வீட்டுக்கு போனார்கள். *Jonny class topper in 7th B1 class,* எப்படியாவது *full mark* எடுக்கனும் என்று பொருட்களை தேடினான். அவன் வீட்டுல நிறைய *attractive bowls, colourful beakers* எல்லாம் இருந்துச்சு, அவன் எல்லாத்தையும் எடுத்து அதில் தண்ணி ஊற்றிப் பார்த்தான். *But* எதுவுமே *golden light* அ வெளிப்படுத்தவில்லை. *Jonny* ரெம்ப சோர்ந்து போய்ட்டான்... நமக்கு *full mark* கிடைக்காது னு அழுதுட்டே போய் படுத்துவிட்டான். அடுத்த நாள் காலையில் ஜன்னி ஓட அம்மா அவனுக்கு சாப்பாடு எல்லாம் *pack* பண்ணி *table* ல வச்சுருந்தாங்க.. *Jonny* ரெம்ப கவலையோடு *shoe* போட்டுக்கொண்டிருந்தான், அப்போ திடீர்னு ஒரு *Bright Golden Light* அவங்க வீட்டு *door* ல அடிச்சுச்சு.. என்னனு பாத்தா அது *Jonny* ஓட *water bottle.. Jonny*யோட *bottle* ல *sun light* படும்போது *Golden Light* வெளிப்பட்டுச்சு.. நம்மக்கூட சில நேரம் இப்படித்தான் இருக்கோம் இல்லையா உண்மையான வெளிச்சம் *(JESUS)* நம்மக்கூடயே இருக்கும்போது சந்தோசம் வேணும், சமாதானம் வேணும் நா இருளில் இருக்கேன் னு நினைத்து வருந்தி வெளிச்சத்தை தேடி தண்ணி ஆகிய நம்ம உலகம் என்கிற இருட்டு பாத்திரத்தில் நம்மை ஊற்றி விடுகிறோம். *Jonny* அவனுக்கான *Golden Light* அ கண்டுபிடிச்சு *10/10 marks* வாங்கிட்டான். நம்ம எப்போ வாங்கப் போகிறோம் ?**

*-Blessy*

## என் மீட்பர் என் வெளிச்சம்

**உலகின் மீட்பரானவர் எனது வெளிச்சமானார்
இருளான என் வாழ்வில்
ஒளிச்சுடராய் வழி நடத்தலானார்
மங்கி எறிந்த என் விளக்கை
புது எண்ணெய் கொண்டு மிளிரச் செய்தார்
முறிந்து போன என் ஆத்துமாவை
புதுபெலன் கொடுத்து உயரச்செய்தார்
என் ஆத்தும நேசரவர்
ஜெயம் கொடுக்கும் ஜெய கிறிஸ்து அவர்**

*- Jebasta Merlin*

---

Reg.No. 4/46/2019
Regd.Office :428,7th Middle Street,Thiagarajanagar, Tirunelveli - 627011
Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org